## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI

## DEPOSITION OF WITNESS

*(Chapter XXIII Code of Criminal Procedure)*

**CC.No. 26/2021** **DATE : 12.07.2023**

அ.சா.**1**

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father's Name | : கிருஷ்ணசாமி |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : தப்பக்குட்டை | Calling | : தறிவேலை |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.07.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், தப்பக்குட்டை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தறி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெியும். கடந்த 08-06-2020 ம் தேதி, மாலை 05.30 மணிக்கு எதிரி ராமசாமி எனது அண்ணன் பாலு, என்பவருக்கு போன் செய்து பத்திரத்தை வாங்கி செல்ல வீட்டிற்கு வருமாறு அழைத்தார். அதனால், நானும், எனது அண்ணன் பாலுவும் எதிரி ராமசாமியின் வீட்டிற்கு அருகே சென்று கேட்டபோது பத்திரத்தை கொடுக்க மாட்டேன் என்று சொல்லி மல்லிகா , கமலா மற்றும் எதிரி ராமசாமி ஆகியோர் எங்களை பார்த்து கண்டாரஓழி தேவடியா பையா என்ற ஆபாச வார்த்தையால் திட்டியும், எதிரி ராமசாமி சுத்தியால் தலையில் அடித்து பலத்த காயத்தை ஏற்படுத்தினார். எதிரி யுவராஜ் இரும்பு ராடால் எனது இரு கைகளிலும் அடித்ததில் எனது இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது **( சாட்சி எனது இடது கையில் உள்ள தழும்பை காட்டினார்).**

2) பின்னர், வரதராஜ் என்னை பிடித்து கொண்டு ராமசாமியின் மருமகன் என்னை கீழே தள்ளிவிட்டார். முருகேசன் என்னை இரும்பு ராடால் தலையிலும், இரு கால்களில் அடித்து அதில் வலது காலில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி ராமசாமியின் மனைவி கமலா என்னை ஈட்டியால் குத்த வந்து அதை நான் தடுத்தபோது எனது வலது முழங்கையின் முட்டியில் காயம் ஏற்பட்டுவிட்டது. எதிரி ராமசாமியும், கமலாவும் என்னை பார்த்து பத்திரத்தை கொடுக்க முடியாது என்று சொல்லியும், உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்றும் கொலை மிரட்டல் விடுத்தார்கள்.

3) பின்னர், காயமடைந்த என்னை சிகிச்சைக்காக எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு

சென்றேன். பின்னர், சம்பவம் தொடர்பாக மகுடஞ்சாவடி போலிசார் மருததுவமனை வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்று சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை.

Witness (Sd)-Senthilkumar

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.

<u>**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**</u>

# <u>DEPOSITION OF WITNESS</u>

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

**CC.No. 26/2021** **DATE : 12.07.2023**

அ.சா.**2**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாலு | Father's Name | : கிருஷ்ணசாமி |
| District | : சேலம் | Taluk | : சங்ககிரி |
| Village | : இளம்பிள்ளை | Calling | : தறிவேலை |
| Religion | : இந்து | Age | : - |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.07.2023.

**(எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார்கள்)**

<u>**முதல் விசாரணை :**</u>

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், இளம்பிள்ளையில் வசித்து வருகிறேன். நான்பிரிண்ட்டிங் பிரஸ் வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 08-06-2020 ம் தேதி, மாலை 06.30 மணிக்கு எதிரி ராமசாமி எனக்கு போன் செய்து பத்திரத்தை வாங்கி செல்ல வீட்டிற்கு வருமாறு அழைத்தார். அதனால், நானும், எனதுதம்பி செந்தில்குமாரும் எதிரி ராமசாமியின் வீட்டிற்கு அருகே சென்று கேட்டபோது பத்திரத்தை கொடுக்க மாட்டேன் என்று சொல்லி எதிரி ராமசாமி எங்களை பார்த்து கண்டாரஓழி பையனே தேவடியா பையனே என்ற ஆபாச வார்த்தையால் திட்டியும், எதிரி ராமசாமி சுத்தியால் எனது தம்பியின் தலையில் அடித்து பலத்த காயத்தை ஏற்படுத்தினார்.

2) எதிரி ராமசாமியின் மருமகன் எனது தம்பி செந்தில்குமாரை பின்னால் இருந்து எட்டி உதைத்தார். முருகேசன் என்பவர் இரும்பு ராடால் அ.சா.1 ன் தலை மற்றும் கால்களில் அடித்துவிட்டார். யுவராஜ் இரும்பு ராடால் அ.சா.1 ஐ இரு கைகளிலும் அடித்ததில் அ.சா.1 இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டுவிட்டது. என்னை கமலாவும், வரதராஜ்-ம் திமிராதவாறு பிடித்துகொண்டனர்.

3) பின்னர், அ.சா.1 க்கு பலத்த ரத்த காயம் ஏற்பட்டு அவரை சிகிச்சைக்கா தனியார் ஆம்புலன்ஸ் மூலம் எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு நானும், எனது மகன் மணிகண்டன், மகள் ஜீவதுர்கா ஆகியோர் அ.சா.1 ஐ அழைத்து சென்று, பின்னர், அ.சா.1 ஐ மேல்சிகிச்சைக்காக SKS மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை இல்லை.

Witness (Sd)-Balu

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.